டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637002.

தமிழாய்வுத்துறை

பொதுத்தமிழ் தாள் 4 – காப்பியங்களும் புதினமும்

தாள் குறியீடு : 21UFTA03

# தலைப்பு : கம்பராமாயணம்


தயாரிப்பு:

முனைவர் தா.க. அனுராதா,

உதவிப்பேராசிரியர் & துறைத்தலைவர் (முதுகலை)

http://www.trinitycollegenkl.edu.in/

## முன்னுரை:

‘கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு’

என்று பாரதியார் பெருமைப்பட்டுக் கொள்ளும் விதமாக கவிச்சக்ரவர்த்தி கம்பரால் இயற்றப்பட்ட கம்பராமாயணம் ஈடு இணையற்ற காப்பியமாகத் திகழ்கிறது. கம்பரின் பெருமைகளும் ஆளுமையும் கவித்துவமும் கம்பராமாயணத்தின் சிறப்பை உலகளாவிய அளவில் எடுத்துச் சென்றுள்ளன எனலாம்.

உட்பிரிவுகள்:

- கம்பராமாயணம் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களையும் 113 படலங்களையும் கொண்டது.
- பால காண்டம் - இது இராமன் பிறப்பு முதல் வளர்ப்பு வரை கூறும் பகுதி.
- அயோத்தியா காண்டம் - இராமன், விசுவாமித்திரன் வேள்வியைக் காத்தல், ஜனகனின் வில்லை முறித்தல், சீதையை மணத்தல் முதலியவற்றைக் கூறும் பகுதியாகும்.

- மந்தரையின் சூழ்ச்சியால் இராமன் காடேகுதலும் அங்கு சீதையை இழத்தலும் கூறுவது ஆரண்ய காண்டமாகும்.
- இராவன் - சுக்ரீவன் நட்பு, வாலிவதை, சீதையைத் தேடும் முயற்சி இவற்றைக் கூறுவது கிட்கிந்தா காண்டமாகும்.
- அனுமன் சீதையை அசோகவனத்தில் சந்திப்பதும், அவளைப் பற்றி இராமனிடம் தெரிவித்தலும் கூறுவது சுந்தரகாண்டமாகும்.
- யுத்த காண்டம் இராவணனின் அழிவைக் கூறுகின்றது.

## காப்பிய அமைப்பு:

கம்பன் தம் காப்பியத்திற்கு இராமாவதாரம் என்று பெயரிட்டுள்ளார். ஆனால் அப்பெயர் கம்பனது சிறப்புக்கு முன் நிற்க இயலாது, கம்பராமாயணம் என்று மாறி வழங்குவதாயிற்று.

## வால்மீகியும் கம்பரும்:

வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தம் நூலை இயற்றியதாகக் கம்பன் குறிப்பிடுகிறார். எனினும் கம்பன் வால்மீகியை முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளவில்லை. சீதையைக் காட்டிற்கு அனுப்புதல், இராமனுக்கு ஏற்பட்ட பழிச்சொல், சீதை, இலட்சுமணன், இராமன், பரதன், சத்ருக்கனன் போன்றோரின் மண்ணுலக வாழ்வின் நிறைவு போன்ற பல இடங்களில் கம்பர் வால்மீகியிலிருந்து மாறுபடுவதைக் காணலாம். கம்பன் செய்த மாற்றங்கள் இராம பக்திக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் வலுவூட்டுவனவாகக் காணப்படுகின்றன.

## சமயப் பொது நெறி:

கம்பன் தன் காப்பியத்தை இராமபக்தியைப் பரப்பும் நோக்கில் இயற்றினார் என்றாலும், இக்காப்பியத்தைக் கவியரசர் விவரித்துச் செல்லும் பாங்கும் சொல்லப்படுகின்ற நன்னெறிகளும் வைணவம் என்ற ஒரு தனி சமயத்திற்கு மட்டும் உரியது அன்றி, யாவர்க்கும் பொதுவானது என்ற உணர்வையே தருகின்றன. சமயவெறியைத் தவிர்த்துக் கடவுள் பொதுமையை வலியுறுத்தும் பாடல்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

## கம்பன் கவி இன்பம்:

‘கம்ப நாடன் கவிதையைப் போல் கற்றோர்க்கு இதயம் களியாது’ என்பது வழக்கு. அவரது கவிதைகள் பயிலும் தோறும் பயிலும் தோறும் புதிய கருத்தாழத்தையும் நெஞ்சை இன்புறுத்தும் கற்பனை நயத்தையும் கொண்டவை. கதை நிகழ்கிற சூழலுக்கேற்ற ஓசைநயம் மிக்கவை. மனிதகுலம் முழுமையினையும் நலமாக வாழ வைக்கிற விழுமிய அறநெறிகளையும் எதிர்பார்ப்புகளையும் உடையவை. உவமைகள் தங்குதடையின்றி நடமாடும் சிறப்பினைப் பெற்றவை.

முடிவுரை:

கவிதை நயம், கருத்தாழம், சார்பற்ற பொதுமை போன்ற பல்வேறு சிறப்புகள் நிறைந்துள்ளமையாலேயே கம்பராமாயணம் இந்திய இராமாயணங்களுள் சிறந்து விளங்குகிறது. உலகப் பெருங்காப்பியங்களுடன் ஒருங்கே வைத்து எண்ணப்படுகிற தமிழ்க் காப்பியமாக உயர்ந்து நிற்கிறது.

நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/